பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 19 புதன்கிழமை 02.02.2022 கதிர் 315

## மதுபானசாலைகளுக்கு வெள்ளிக்கிழமை 'பூட்டு'

74 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு அனைத்து மதுபான சாலைகள் மற்றும் இறைச்சி விற்பனை நிலையங்கள் மூடப்படவுள்ளன.

உள்விவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிவித்தலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

☞2

# இரண்டு மாதங்களுக்குள் தீர்வு இல்லையேல் அரசுக்கு ஆபத்து

## வலுசக்தி அமைச்சர் கம்மன்பில பகிரங்க எச்சரிக்கை



சமூக மட்டத்தில் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு இன்னும் இரு மாதங்களுக்குள் தீர்வு காணாவிடின் அது அரசின் இருப்புக்கு ஆபத்து மிக்கதாக அமையும்.

- இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலுசக்தி துறை அமைச்சு இலங்கை

☞2

## இலங்கைக்கு கடத்தவிருந்த 500 கிலோ கஞ்சா சிக்கியது!



(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடத்த முயன்ற 500 கிலோ கஞ்சா தமிழ் நாடு, நாகை மாவட்டம் - அக்கரைப்பேட்டை

☞2

## திருமலை ஸ்ரீ சண்முகா இந்துவில் மீண்டும் 'ஹபாயா' சர்ச்சை

# அதிபரைத் தாக்கிய ஆசிரியை; மாணவர்கள் பெரும் போராட்டம்

## கிழக்கு கல்வித் திணைக்களம் தீவிர விசாரணை

**ஆசிரியரால் தாக்கப்பட்டு மயக்கமுற்ற நிலையில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் இணைந்து கல்லூரிக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

☞2



## யாழ். மாவட்ட செயலகத்தை முடக்கி மீனவர்கள் நாளை பெரும் போராட்டம்

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் ஏ - 9 வீதியை முடக்கி நாளை போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது என யாழ். மாவட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்திய மீன்வர்களின் அத்துமீறலைக் கண்டித்து 3 நாள்களாகத் தொடர்ச்சியாகப் போராடி வரும் யாழ். மாவட்ட மீனவர்களுக்கு உரிய தீர்வு இதுவரை கிடைக்காத நிலையில் அவர்கள் நாளை மாவட்ட செயலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் நாளைமறுதினம் இலங்கையின் சுதந்திர தினத்தில் தேசியக் கொடியை

☞2

## மன்னாருக்கு கோட்டா இன்று திடீர் பயணம்!

(ந.லோகதயாளன்)



மன்னார் மாவட்டத்திலுள்ள மின் உற்பத்தி நிலையத்துக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று வருகை தந்தார்.

மன்னார் தாழ்வுப்பாட்டில்

☞2

## உயர்தரப் பரீட்சைக் காலப்பகுதியில் சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை காலப்பகுதியில் அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படவுள்ளது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி குறித்த பாடசாலைகளின் அனைத்து வகுப்புகளுக்கும் இவ்வாறு விடுமுறை வழங்கப்படவுள்ளது.

அதற்கமைய, இம்மாதம் (பெப்ரவரி) 7ஆம்

☞2

## உருவாகுகின்றது அடுத்த கொரோனா அலை; பரிசோதனை உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு



### உபுல் ரோஹண தெரிவிப்பு

கொரோனா வைரஸ் தொற்றைப் பரிசோதிக்கும் ரெபிட் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். உபகரணங்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு நாளாந்தம் வெளியிடும் கொரோனாத்

☞2

## மர்மப் படகு குறித்து விசாரணை



(ந.லோகதயாளன்)

மன்னார் வளைகுடா கடல் பிராந்தியம் அருகே இரண்டாம் மணல் திட்டில் கரை ஒதுங்கிய மர்மப் படகு குறித்து இந்திய உளவுத்துறை கடலோர காவல் படையினர் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தனுஷ்கோடி அருகே இரண்டாம் மணல் திட்டில் இலங்கை கண்ணாடி இலைப் படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது என் நேற்றுமுன்தினம் இரவு தனுஷ்கோடி மீனவர்கள் மெரைன் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து அங்கு சென்ற மெரைன்

☞2

Since 2014

அருந்ததி

திருமண சேவை

28.02.2022 வரை இலவசப்பதிவுகளை மேற்கொள்ளமுடியும்

+94777164524

www.arunthathee.com

## மன்னாருக்கு கோட்டா ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து தலைமன்னார் வரை அமைக்கப்பட்டுள்ள காற்றலையில் தற்போது 200 கிலோ வாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் அதேநேரம் அதை மேலும் விஸ்தரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்படி மின் உற்பத்தி நிலையத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி, இலங்கை மின்சார சபை உயர் அதிகாரிகளிடம் அது தொடர்பான விபரங்களையும் கேட்டறிந்தார்.

இரண்டு மணிநேரம் நீடித்த இந்தச் சந்திப்பையடுத்து ஜனாதிபதி உடனடியாகவே கொழும்பு திரும்பினார்.

## யாழ். மாவட்ட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்ற விடாமல் போராட்டம் கடுமையாக இருக்கும் எனவும் யாழ். மாவட்ட மீனவர்கள் எச்சரித்தனர்.

## உருவாகுகின்றது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்றாளர் எண்ணிக்கை அதைவிட பல மடங்கு அதிகம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த கொரோனா அலை தற்போது உருவாகிக் கொண்டிருக்கின்றது எனவும், பாடசாலைகளுக்கிடையில் வைரஸ் வேகமாகப் பரவி வருவதையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அவதானித்து வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கர்ப்பிணிப் பெண்களை கடமைக்கு வரும்படி பணித்துள்ளதால் அவர்களில் பெரும்பாலானோருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

## உயர்தரப் பரீட்சைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திகதி முதல் அடுத்த மாதம் (மார்ச்) 7ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## மர்மப் படகு குறித்து .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸார், உளவுத்துறை மற்றும் சுங்கத் துறையினர் படகை மீட்டு கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

மீட்கப்பட்ட புத்தளம் பகுதியைச் சேர்ந்த பைபர் படகு 22 அடி நீளமும் 3 அடி அகலமும் கொண்ட வெள்ளை மற்றும் சிவப்பு கலரில் இருந்துள்ளது.

படகில் யாரேனும் ஊடுருவினார்களா? அல்லது கடத்தலுக்குப் பயன்படுத்த வந்ததா? அல்லது காற்றின் சீற்றத்தில் கரை ஒதுங்கியுள்ளதா? என்பது குறித்து பாதுகாப்புப் படையினர் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

படகில் இன்ஜின் பொருத்தப்படும் இடம் சேதமடைந்தும், படகில் மீன்பிடி உபகரணங்கள் இல்லாமல் இருந்ததாகவும் தெரிவித்த பாதுகாப்பு அதிகாரிகள் மீட்கப்பட்ட படகை சுங்கத் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

படகு குறித்து இலங்கை பாதுகாப்புப் படையினரிடம் விசாரிக்கும்போது படகின் பதிவு எண் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தது என்றும், ஆனால் படகு காணாமல் போனதாக மீன்பிடித்துறை அமைச்சு மற்றும் பாதுகாப்புத் துறையினருக்கு இதுவரை எந்தப் புகாரும் அளிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

மர்மமான முறையில் இலங்கைப் படகு கரை ஒதுங்கியது தனுஸ்கோடி பகுதி மீனவர்கள் மற்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## அதிபரைத் தாக்கிய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

திருகோணமலையிலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையான ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் சில வருடங்களுக்கு முன் ஹபாயா விவகாரம் தொடர்பில் பிரச்சினை எழுந்த நிலையில் இன்று மீண்டும் அவ்விவகாரம் மாணவர்கள் - ஆசிரியர்கள் - பெற்றோர் மத்தியில் பூதாகரமாக மாறியுள்ளது.

இன்று ஓர் ஆசிரியை முகத்தை முழுவதுமாக மறைத்து 'ஹபாயா' அணிந்து பாடசாலைக்கு வந்த நிலையில் மாணவர்கள் இதை எதிர்த்து வெளிநடப்புச் செய்தனர்.

இதைக் குறித்த ஆசிரியை காணொளிப் பதிவு செய்தார். இந்த நடவடிக்கையைத் தடுக்க அதிபர் தலையீடு செய்தபோது அவரைக் குறித்த ஆசிரியை தள்ளிவிட்டார். கீழே விழுந்து மயக்கமடைந்த அதிபர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஆசிரியையின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் இணைந்து கல்லூரிக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரண்டு மாதங்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மின்சார சபைக்கு எரிபொருள் விநியோகிப்பதை இடைநிறுத்தியுள்ளதால் நாடு தழுவிய ரீதியில் மின்விநியோகத்தைத் துண்டிக்க நேரிடும் என இலங்கை மின்சார சபை குறிப்பிட்டதன் பின்னரே மின்னுற்பத்தித் துறையில் மின்சார சபை முன்னெடுக்காத பல விடயங்களை வலுசக்தி அமைச்சு பகிரங்கப்படுத்தியது.

தேசிய மின்விநியோகக் கட்டமைப்பில் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் யோசனையை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடமும், மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொக்குகேவிடமும் வலுசக்தி அமைச்சர் என்ற ரீதியில் குறிப் பிட்டுள்ளேன்.

மின்விநியோகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நீண்டகால கொள்கையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

நெருக்கடியான நிலையின் போது மாத்திரம் தீர்வு காணும் திட்டங்களைச் செயற்படுத்துவதை மின்சார சபை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

சுபீட்சமான எதிர்கால கொள்கைக்கமைய அரசு செயற்படுகின்றதா என்பது சந்தேகத்துக்குரியது. கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கல், யுகதனவி மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானம் ஆகியன சுபீட்சமான கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பிடப்படவில்லை.

அரசு கொள்கைக்கு முரணாகச் செயற்படும்போது அதனைச் சுட்டிக்காட்டி அரசை நல்வழிப்படுத்தும் பொறுப்பு கூட்டணியில் உள்ள பங்காளிக் கட்சிகளுக்கு உண்டு. சமூக மட்டத்தில் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு இன்னும் இரு மாத காலத்துக்குள் தீர்வு காணாவிடின் அது அரசின் இருப்புக்கு ஆபத்து மிக்கமாக அமையும். - என்றார்.

## இலங்கைக்கு கடத்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அருகே மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களால் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கைக்குக் கடத்தும் நோக்கில் படகில் ஏற்றுவதற்காக வாகனத்தில் எடுத்து வந்து கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வேளையே குறித்த கஞ்சா சிக்கியது.

இதைக் கடத்த முயன்ற ஆறு சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


மேற்படி ஆறு பேரும் பயணித்த வாகனங்களையும் கஞ்சாப் பொதிகளையும் சான்றுப் பொருள்களாக்கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

## மதுபானசாலைகளுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன்படி நாளைமறுதினம் குறித்த வர்த்தக நிலையங்கள் மூடப்படவுள்ளன.

இதேவேளை, 74 ஆவது சுதந்திர தின விழா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு:-
தொலைபேசி இலக்கம்:-
076 443 8622






# கிளிநொச்சியில் படையினரால் பூஸ்டர் தடுப்பூசி வழங்கல்கள்

கிளிநொச்சியில் அமைந்துள்ள முதலாவது படையணி தலைமையகம் மற்றும் கிளிநொச்சி இராணுவத் தள வைத்தியசாலை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், அண்மையில் கிளிநொச்சி விடியல் மற்றும் வானவில் பிரதேசத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு கொவிட் 19 தொற்றுக்கான தடுப்பூசி வழங்கப்பட்டது.

முதலாவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்க கிளிநொச்சியில் உள்ள இராணுவத் தள வைத்தியசாலையின் மருத்துவ ஊழியர்களுடன் இந்தத் திட்டத்தை நெருக்கமாக ஒருங்கிணைத்தார்.

பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படுவதற்கு முன்பு இந்தப் பொதுமக்கள் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் ஏற்கனவே பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புப் பதவி நிலைப் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவின் அறிவுறுத்தலின் பேரில், முதலாவது படையணி தலைமையகத்தின் படையினர் இந்தத் திட்டத்தை ஆரம்பித்தனர். இதன்படி, இரு தொழிற்சாலைகளிலும் மொத்தம் 600 பணியாளர்கள் பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டனர்.

சுகாதார நெறிமுறைகள் மற்றும் தொற்று நோய்த் தடுப்பு வழிகாட்டுதல்களைக் கடைப்பிடித்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# தேசிய மின் கட்டமைப்புடன் யுகதனவி மீண்டும் இணைப்பு



நுரைச்சோலை யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட கோளாறு தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தேசிய மின்கட்டமைப்பில் 100 மெகாவோட் மின்சாரம் சேர்க்கப்பட்டுள்ளது எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# கர்ப்பிணித் தாய்மார்களிடம் கொரோனா அதிகரிப்பு

கர்ப்பிணித் தாய்மார்கள் மத்தியில் கொவிட் வைரஸ் தொற்றுப் பரவல் அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாக இருப்பதாக குடும்பசுகாதார அலுவலகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சித்திரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இது தொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு–

சுமார் 500 கர்ப்பிணித் தாய்மார் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர் எனக் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக கொவிட் வைரஸால் ஏற்படக்கூடிய சிக்கல் நிலையைக் குறைப்பதற்கு பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வைத்தியர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, இம்முறை நடைபெறவுள்ள உயர்தர பரீட்சையில் கொவிட் தொற்றுக்கு உள்ளான மாணவர்களின் வசதி கருதி சில வைத்தியசாலைகளில் பரீட்சை எழுதுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரயில்வே திணைக்களத்தில் 7 ஆயிரம் பணி வெற்றிடம்!

ஓய்வுபெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கு அனுமதி கிடைத்தால், மிகக் குறுகிய காலத்துக்குள் ரயில் சேவைகள் மீளமைக்கப்படும் என ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ரயில்வே துறையில் தற்போது சுமார் 7 ஆயிரம் பணியிடங்கள் காலியாக உள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் போக்குவரத்து அதிகாரிகளுடன் நேற்று (செவ்வாய்க்கிழமை) கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாகவும் தம்மிக்க ஜயசுந்தர மேலும் தெரிவித்தார்.

# வைத்திய மாணவர் மீது ராகமவில் தாக்குதல்!

ராகம வைத்தியசாலையில் மாணவர் பீடத்தின் விடுதி மீது குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வினவிய போது, வெளியில் இருந்து வந்த குழுவினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த மூன்று பல்கலைக்கழக மாணவர்கள் ராகம போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் ஒருவர் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் தாக்குதல் நடத்தியவர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஆட்சிச் சீத்துவம்

இலங்கையினுடைய இன்றைய மோசமான பொருளாதார நிலைமைக்கு இரண்டு முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன.

ஒன்று – கொரோனாப் பேரிடர் ஏற்படுத்திய பின்னடைவு. கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்ட பொது முடக்கம், ஊரடங்கு, போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் போன்றவற்றினால் ஏற்பட்ட தாக்கங்கள்.

அடுத்தது – அரசின் மோசமான பொருளாதாரக் கொள்கைகள், அவை ஏற்படுத்திய விளைவுகள். திடீரென முழு அளவில் சேதன விவசாயம் மட்டும்தான் என்று எடுத்த முட்டாள் தனமான முடிவு அதற்கு உதாரணம்.

கொள்கைப் போக்குகள் மட்டுமல்ல, அதையும் தாண்டி இன்னொரு விடயமும் இருப்பது முக்கியமான விவகாரமாகக் கவனிக்கப்பட வேண்டும். அது கொள்ளைப் போக்கு.

பொருளாதார விடயங்களைக் கையாள்வதில் ராஜபக்ஷ அரசில் ஓர் ஒழுக்கமான நிதி நடைமுறை இருந்ததில்லை. பார்க்கும் பக்கம் எல்லாம் – திக்கு எல்லாம் – ஊழல், மோசடி, குளறுபடி.

மக்களுக்கு சீனியைக் குறைந்த விலையில் வழங்குவதற்கு என்ற ஏற்பாட்டில் திடீரென சீனிக்கான தீர்வை – கிலோவுக்கு ஐம்பது ரூபா என்ற வரி – அடியோடு விலக்கப்பட்டது. ஆனால் சீனி விலை குறைக்கப்படவில்லை. அதே விலைக்கு விற்கப்பட்டது. அந்த சமயத்தைப் பார்த்து சீனியை இறக்குமதி செய்த வர்த்தகர்கள் – பெரும் முதலாளிகள் – சீனி வரி விலக்கினால் மேலதிகமாகக் கிடைத்த கிலோவுக்கு ஐம்பது ரூபா என்ற லாபத்தைச் சுருட்டிச் சென்றனர். இவ்வாறு சுருட்டப்பட்ட தொகை ஆயிரம் கோடி ரூபாவுக்கு அதிகம் என்கிறார்கள்.

அதேபோல சேதன உரம் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற விதியை நடைமுறைக்குக் கொண்டு வந்துவிட்டு, முறையற்ற – பாவனைக்கு நெருக்கடி தரக் கூடிய – தீங்கான – சேதன உரத்தை சீனாவில் இருந்து இறக்குமதி செய்துவிட்டு, அதைப் பயன்படுத்தாமல் வெறுமனே அதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டி நேர்ந்ததும், சந்தி சிரித்த அரசின் நிர்வாகத் திறமையாகும். இந்தக் குளறுபடியால் ஏற்பட்ட பல நூறு கோடி ரூபா நட்டத்துக்கும் யாரும் பொறுப்புக் கூறவில்லை.

இப்போது ரயில்வேத் துறையில் இடம்பெற்ற பெரும் குளறுபடி குறித்து தகவல் வெளிவந்திருக்கின்றது.

2019 இலிருந்து இதுவரை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருத்தமற்ற ரயில்வே இயந்திரங்கள் பத்தில் எட்டு பாவிக்க முடியாமல் களஞ்சியத்தில் தூங்குகின்றன வாம். வழமையாக இலங்கையில் 60 முதல் 80 தொன் கொண்ட ரயில் இயந்திரங்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. அவைதான் நாட்டின் ரயில் பாதைக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியவை. ஆனால் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை 120 தொன் இயந்திரங்கள். அவற்றை நம் நாட்டு தண்டவாளங்களில் பயன்படுத்த முடியாது. ஒரு பிரதான பாதையில் மட்டும் அந்தப் பத்தில் இரண்டு கிடைத்த மட்டும் பயன்படுத்தப்படுகின்றன. அவை கூட அடிக்கடி தடம் புரளும் நிலைமை. இந்த ஆட்சியில் எழுபது கோடி ரூபா செலவில் வாங்கிய 10 இயந்திரங்களில் எட்டு சும்மா இடத்தை அடைத்துக் கொண்டு கிடக்கின்றன. அதேபோல இந்தியாவிலிருந்து 240 கோடி ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட 160 ரயில் பெட்டிகள் ஆக இரண்டு ரயில் சேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன வாம்.

இவ்வாறு அரச துறைகளில் நிலவும் ஊழல், மோசடி, வீண்விரயம், லஞ்சம் எல்லாம் சேர்ந்துதான் நாட்டை இந்தக் கேவல நிலையில் மூழ்கடித்துள்ளன. இவை எல்லாம் ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சியின் நிர்வாகச் சிறப்பு!

# இதுவரை பரிசோதித்த ஏவுகணைகளின் படங்களை வெளியிட்டது வடகொரியா

கடந்த 5 ஆண்டுகளில் மிகவும் சக்தி வாய்ந்தது என வடகொரியா கூறிவரும் ஏவுகணை சோதனையின் புகைப் படங்களை அந்நாடு வெளியிட்டுள்ளது.

விண்ணில் இருந்து எடுக்கப்பட்ட இந்த அசாதாரண புகைப்படங்கள், கொரிய தீபகற்பத்தின் பகுதிகள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைக் காட்டுகின்றன.

ஐ.ஆர்.பி.எம் எனப்படும் இடைநிலை தூர பாலிஸ்டிக் வகை, ஹ்வாசோங் – 12 என பெயரிடப்பட்டுள்ள ஏவுகணையை சோதனை செய்ததாக திங்கள்கிழமை வடகொரியா உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த ஏவுகணை அதன் முழு சக்தியில், ஆயிரக்கணக்கான மைல்கள் பயணிக்க முடியும். மேலும், அமெரிக்கப் பகுதியான குவாம் போன்ற பகுதிகளும், ஏவுகணையால் தாக்கப்படும் தொலைவில் உள்ளன.

சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஏவுகணை சோதனை, சர்வதேச சமூகம் மத்தியில் மீண்டும் எச்சரிக்கையை எழுப்பியுள்ளது.

பியோங்யோங் கடந்த மாதத்தில் மட்டும் 7 ஏவுகணை சோதனைகளை நடத்தியுள்ளது. அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் பிற நாடுகளால் இச் சோதனைகள் கடுமையாகக் கண்டிக்கப் பட்டது.

வடகொரியா ஏவுகணை மற்றும் அணு ஆயுதச் சோதனைகளை மேற் கொள்வதற்கு எதிராக ஐநா கடுமையான தடைகளை விதித்துள்ளது. ஆனால், கிழக்கு ஆசிய நாடான வடகொரியா இந்த தடைகளைத் தொடர்ந்து மீறி வருகிறது.

சக்திவாய்ந்த ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியுள்ள காரணத்தால், அந்நாட்டுடன் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் திங்கள்கிழமை தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்த ஏவுகணை சோதனையை, தங்கள் ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகளில் கண்டறிந்த பின்னர், தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளும் முதலில் அதுகுறித்து அறிவித்தது.

இந்த ஏவுகணை 2,000 கி.மீ. (1,240 மைல்கள்) உயரத்தை எட்டியதாகவும், 800 கி.மீ (500 மைல்கள்) தூரத்திற்கு 30 நிமிடங்கள் பறந்ததாகவும் ஜப்பானிய மற்றும் தென் கொரிய அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர். இந்த ஏவுகணை, ஜப்பான் கடலில் விழுந்தது. முழு ஆற்றல் மற்றும் நிலையான பாதையில் இந்த ஏவுகணை, 4,000 கி.மீ. தூரம் வரை செல்ல முடியும்.

ஏவுகணை ஏவப்பட்டதை வடகொரியா தனது அரசு ஊடக அறிக்கைகள் மூலம் திங்கள்கிழமை உறுதி செய்தது. கட்டுப்பாட்டை மீறிய இத்தகைய ஏவுகணை சோதனைகளின் விவரத்தை, பொதுவாக சோதனைக்கு பிந்தைய நாளே அந் நாட்டின் அரசு ஊடகங்கள் வெளியிடும்.

இந்த சோதனை, ஏவுகணையின் துல்லியத்தன்மை குறித்து உறுதிப்படுத்த மேற்கொள்ளப்பட்டதாக, அரசு செய்தி முகமையான கே.சி.என்.ஏ தெரிவித்துள்ளது. அண்டை நாடுகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு தரையிறங்கும் வகையிலான கோணத்தில் ஏவுகணை ஏவப்பட்டது.

மேலும், முன்னெப்போதும் இல்லாத வகையில் ஏவுகணை சோதனை குறித்த புகைப்படங்களும் அரசு ஊடக அறிக்கையில் அச்சிடப்பட்டிருந்தன. அவற்றுள் சில ஏவுகணையின் வார்ஹெட் பகுதியில் பொருத்தப்பட்ட கேமரா மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில், இரண்டு புகைப்படங்கள் ஏவுகணை ஏவப்பட்ட தருணத்தைக் காட்டுகின்றன, மற்றொன்று, ஏவுகணை நடுவானில் சென்றுகொண்டிருக்கும்போது விண்ணில் இருந்து எடுக்கப்பட்ட புகைப் படமாகும்.

ஞாயிற்றுக்கிழமை ஏவுகணையை ஏவியபோது வடகொரிய அதிபர் கிம் ஜோங் – உன் உடன் இல்லை. கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு, ஹைபர் சோனிக் கிளைட் ஏவுகணை சோதனையின்போது அவர் வருகை இருந்ததை புகைப்படங்கள் காட்டின. ஏவுகணை – கண்டறிதல் அமைப்புகளைத் தவிர்க்க வடிவமைக்கப்பட்ட ஒரு மேம்பட்ட வகை ஏவுகணைத் தொழில்நுட்பமே ஹைபர் சோனிக் கிளைட் ஏவுகணை ஆகும். அந்த ஏவுகணைகள் வடகொரியாவால் மட்டுமே மொத்தம் மூன்று முறை சோதிக்கப்பட்டது.

வட கொரியா ஆய்வாளர் அங்கிட் பாண்டா, ஏவுகணை சோதனையின் போது கிம் இல்லாதது மற்றும் ஏவுகணையை விவரிக்க ஊடகங்களில் பயன்படுத்தப்பட்ட மொழி ஆகியவை, இந்த சோதனை புதிய தொழில்நுட்பத்தை காட்டுவதற்கு பதிலாக, ஏவுகணை அமைப்பு செயல்படுவதை சரிபார்க்கும் நோக்கம் கொண்டவை என்று கூறினார்.

இருப்பினும், அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்பின் நிர்வாகத்தின் கீழ், வட கொரியா அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், கணிசமான அளவிலான அணுசக்தி திறன் கொண்ட ஏவுகணையான ஹ்வாசோங்–12 ஐ வட கொரியா ஏவுவது



இதுவே முதல் முறை

கடைசியாக ஹ்வாசோங் – 12 2017 இல் சோதிக்கப்பட்டது, பியாங்யாங் அதைஜப்பானியதீவானஹொக்கைடோ மீது இரண்டு முறை அனுப்பியது உட்பட ஆறு முறை ஏவப்பட்டது, இது அங்கு வசிப்பவர்களுக்கு எச்சரிக்கையைத் தூண்டியது.

2018 ஆம் ஆண்டில், கிம் டிரம்பை சந்தித்த பிறகு, வட கொரியா அணு ஆயுதங்கள் மற்றும் அதன் நீண்ட தூர கண்டம்விட்டுகண்டம்பாயும்ஏவுகணைகளை சோதனை செய்வதற்கு தடை விதித்தது. ஆனால், அடுத்த ஆண்டு, இரு நாடுகளுக்கு இடையேயான உறவுகள் மோசமடைந்ததால், இனி இந்த அறிவிப்புக்குக் கட்டுப்பட மாட்டோம் என கிம் கூறினார்.

தென் கொரிய அதிபர் மூன் ஜே – இன் சமீபத்திய ஏவுகணை சோதனையின் மூலம், வட கொரியா ஏவுகணை சோதனைகள் மீதான தடை அறிவிப்பை அழிக்கும் நிலைக்கு வந்துவிட்டது என்று ஞாயிற்றுக்கிழமை கூறினார்.

இந்த ஆண்டு வட கொரியாவின் ஏவுகணைச் செயல்பாடு அதிகரித்ததற்கு பல காரணங்கள் உள்ளன, இது கிம் தனது புத்தாண்டு உரையில் முதன் முதலில் சுட்டிக்காட்டப்பட்டது.

நீண்டகாலமாக நின்றுபோன அணு சக்திப் பேச்சுவார்த்தைகளுக்குஅமெரிக்காவை மீண்டும் அழுத்தம் கொடுப்பதற்கும், பிராந்திய மற்றும் உலக வல்லரசுகளுக்கு வலிமையைக் காட்டுவதற்கும், புதிய பொறியியல் மற்றும் ராணுவக் கட்டளை அமைப்புகளை சோதிக்கும் நடைமுறைத் தேவையின் காரணமாகவும் கிம்மின் விருப்பத்தை இந்த சோதனைகள் பிரதிபலிக்கின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த வார இறுதியில் பெய்ஜிங்கின் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் தென் கொரிய அதிபர் தேர்தல் மார்ச் மாதம் நடைபெறவுள்ள நிலையில், இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தென் கொரியாவில் வசிக்கும் டிராய் பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் பேராசிரியரான டாக்டர் டேனியல் பிங்க்ஸ்டன் கூறுகையில், தென் கொரியாவையும், வரவிருக்கும் அதிபரையும் பயமுறுத்துவதற்கு அவர்களின் கடந்த கால நடத்தையுடன் இது ஒத்துப்போகிறது என தெரிவித்தார்.

அமெரிக்கா தலைமையிலான பொருளாதாரத் தடைகள், தொற்றுநோய் சிக்கல்கள் மற்றும் பல தசாப்தங்களாக தவறான நிர்வாகத்தின் கீழ் வட கொரிய பொருளாதாரம் போராடி வருவதால், இத்தகைய ஏவுகணை சோதனைகளில் எழுச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த மாத தொடக்கத்தில், வடகொரியா மீது அமெரிக்கா மேலும் பொருளாதார தடைகளைவிதித்தமைகுறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. பாதுகாப்பு சபையில் ரஷ்ய – அமெரிக்க இடையே காரசாரமான விவாதம்!

உக்ரைனுடனான அதன் எல்லைகளில் ரஷ்யா தனது படைகளை குவித்துள்ளது பற்றி விவாதிக்க அமெரிக்கா ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்ததை அடுத்து, ஐ.நா பாதுகாப்பு சபையில் ரஷ்ய மற்றும் அமெரிக்க தூதர்களுக்கு இடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க தூதர் லிண்டா தாமஸ் – கிரீன்ஃபீல்ட், பல தசாப்தங்களில் ஐரோப்பா கண்டிராத மிகப்பெரிய அணிதிரட்டல் இதுவென விவரித்துள்ளார்.

ரஷ்யாவின் விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீட்டையும் வெறித்தனத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது என ரஷ்யப் பிரதிநிதி குற்றம் சாட்டினார்.

ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்தால் மேலும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என அமெரிக்காவும் பிரித்தானியாவும் உறுதியளித்துள்ளன.

தற்போது கிரெம்ளினுக்கு நெருக்கமான தனிநபர்கள் மற்றும் வணிகங்களை விட பரந்த அளவிலான சட்டத்தை இலக்காகக் கொண்ட சட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக பிரித்தானிய வெளியுறவு செயலாளர் லிஸ் ட்ரஸ் கூறினார்.

வொஷிங்டனின் பொருளாதாரத் தடைகள் கிரெம்ளினுக்கு நெருக்கமான நபர்கள் சர்வதேச நிதி அமைப்பிலிருந்து துண்டிக்கப்படுவார்கள் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினார்.

ஐ.நா. பாதுகாப்பு சபையின் கூட்டத்தில், ரஷ்ய தூதர் வசிலி நெபென்சியா, உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா இராணுவ நடவடிக்கைக்கு திட்டமிட்டுள்ளது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றும், அதன் துருப்புக் குவிப்பு ஐ.நாவால் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் கூறினார். ரஷ்யா தனது சொந்த பிரதேசத்தில் அடிக்கடி படைகளை நிலைநிறுத்துவதாகவும், இது வொஷிங்டனின் வணிகம் அல்ல என்றும் அவர் கூறினார்.

## இத்தாலியின் ஜனாபதிபதியாக மீண்டும் செர்ஜியோ மெட்டரெல்லா தேர்வானார்!

இத்தாலியின் ஜனாபதிபதியாக தற்போதைய ஜனாதிபதி செர்ஜியோ மெட்டரெல்லா, இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பிரதிநிதிகள் சபையில் 1,000க்கும் மேற்பட்ட சட்டமியற்றுபவர்கள் மற்றும் பிராந்திய பிரதிநிதிகள் மத்தியில் எட்டாவது சுற்று வாக்கெடுப்பில், மேட்டரெல்லா 1009 வாக்குகளில் 759 வாக்குகளைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த வாரம் முறைப்படி பதவியேற்பு விழா நடைபெறவுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதியான மேட்டரெல்லாவின் ஏழு ஆண்டு பதவிக்காலம், பெப்ரவரி 3ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

ஆனால், 80 வயதான மேட்டரெல்லா, நீண்ட காலமாக பதவியில் நீடிப்பதை நிராகரித்திருந்தார். ஆனால் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால், முந்தைய நாள் ஜனாதிபதி மாளிகையில் அவரைச் சந்தித்த நாடாளுமன்றத் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் தனது முடிவை மாற்றிக்கொண்டார்.

1946இல் இத்தாலி குடியரசாக மாறியதில் இருந்து



ஜியோர்ஜியோ நபோலிடானோ இரண்டாவது முறையாக பணியாற்றினார். ஆனால் அவர் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 2015இல் இராஜினாமா செய்தார்.

அரசியல் நெருக்கடிகளின் போது அரச தலைவர் கணிசமான அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தை கலைப்பது முதல் புதிய பிரதமர்களைத் தேர்ந்தெடுப்பது மற்றும் பலவீனமான கூட்டணிகளுக்கான கட்டளைகளை மறுப்பது வரையிலான அதிகாரங்கள் ஜனாதிபதி பதவிக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

# நிதி அமைச்சர் பஸிலையும் விசாரணை செய்யவேண்டும்

## வலியுறுத்துகிறார் இரா.சாணக்கியன்



நிதி அமைச்சர் வடகொரியாவில் இருந்து கறுப்பு டொலர் மூலம் ஆயுதம் வாங்கியதாகச் சொல்லுகின்றார். இந்த கருத்தைக் கொண்டு கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தியமை தொடர்பில் அவரை முதலில் விசாரணை செய்ய வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்று சொல்லி ஒரு கூட்டம் இங்கு இடம்பெற்றது. மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் எதுவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவில்லை. அதற்குக் காரணமாக நிதி இல்லை என்று சொல்லப்படுகின்றது.

அண்மையில் நீதியமைச்சர் வடக்கிற்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தார். இதில் காணாமல் போனவர்களின் விடயம் தொடர்பில் ஆராய்ந்துள்ளார் எனவும் சொல்லப்படுகின்றது. உண்மையில் இந்த உறவுகள் காணாமல் போனவர்கள் அல்லர். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்பதை அவர் மறந்துவிடக் கூடாது. காணாமல் போனவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த ஒரு லட்சம் ரூபாவுக்காக தாய்மார் இன்று வரை வீதியில் போராடவில்லை என்பதையும் அவர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அத்துடன் நேற்றைய செய்தியில் பார்த்திருந்தேன் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, தாங்கள் வடகொரியாவில் இருந்து கறுப்பு டொலர்களைப் பயன்படுத்தி யுத்தத்திற்கு ஆயுதங்கள் பெற்றுள்ளதாகத் தெரிவித்திருந்தார். ஒரு நாட்டின் நிதி அமைச்சர் எவ்வாறு இவ்வாறானதொரு கருத்தைச் சொல்ல முடியும்?

பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட ஒருநாட்டில் கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி ஆயுதம் வாங்கி இந்த யுத்தத்தை நடத்தியதாகச் சொல்லுகின்றார்கள். இனிவரும் காலங்களில் இன்னும் இன்னும் எத்தனை உண்மைகளை நாங்கள் அறியக் கூடியதாக இருக்குமோ தெரியவில்லை.

நீதி அமைச்சர் சொல்லுகின்றார் காணாமல் போனாருக்கு நட்டஈடு கொடுப்பதாக, அதே நேரத்தில் நிதி அமைச்சர் வடகொரியாவில் இருந்து கறுப்பு டொலர் மூலம் ஆயுதம் வாங்கியதாகச் சொல்லுகின்றார். இந்த கருத்தைக் கொண்டு கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தியமை தொடர்பில் அவரை முதலில் விசாரணை செய்ய வேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகள் இதனைக் கவனிக்க வேண்டும்.

தொடர்ந்தும் இந்த அரசாங்கம் இவ்வாறு ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற விடயங்களை வன்மையாகக் கண்டிக்க வேண்டும். எமது மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் சொன்னார் பொங்கலுக்குப் பிறகு எமது மாவட்டத்தில் பலமில்லியனர்கள் உருவாகுவார்கள் என்று. ஆனால் இன்று மாவட்டத்தில் உருவான ஒரு மில்லியனர் கூட இல்லை. இன்று மாவட்ட விவசாயிகள் எல்லாம் மிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்று இந்தக் கூட்டத்தில் கூட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதைக் கூட நாங்களே முன்வைக்க வேண்டி இருக்கின்றது.

அதே நேரத்தில் இன்று ஒமிக்கறோன் மட்டக்களப்பில் அதிகமாக இருக்கும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அப்படியான ஒரு நேரத்தில் அவசரமாக இந்தக் கூட்டம் எதற்காக? இன்று முக்கியமானவர்கள் பலரை இந்தக் கூட்டத்துக்கு அழைக்கவும் இல்லை.

வழமையாகப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் நடைபெற்று அதில் தீர்மானிக்கும் விடயங்களை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கொண்டு வருவதுதான் வழமை. ஆனால் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடந்திருக்கின்றது. பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் இனிவரும் காலங்களிலும் நடக்க இருக்கின்றன. இவ்வாறானதோர் குழப்ப நிலை இந்த மாவட்டத்தில் இருக்கின்றது.

கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாங்கள் கதைக்க வேண்டும் என்றால் கையை உயர்த்திக் கதைக்க வேண்டுமாம். இது சந்திரகாந்தனின் பிறந்த நாள் விழா அல்ல நாங்கள் கையை உயர்த்திவிட்டுக் கதைப்பதற்கு.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பல விடயங்களுக்குத் தீர்வுகளைத் தருவதாகச் சொல்லியிருந்தார். விசேடமாக ஐ புரொஜக்ட் நிதியை வைத்திருக்கும் நபரிடமிருந்து அந்த நிதியை மீள எடுத்து அந்தத் திட்டத்துக்கு வழங்குவதற்கான அனுமதியை அவர் வழங்கியிருந்தார். அதேவேளை கெவிலியாமடுவில் இடம்பெறும் சட்டவிரோத குடியேற்றங்களைத் தடுப்பது தொடர்பில் ஆராய்வதற்கு நாங்கள் வலியுறுத்தியிருந்தோம். அம்பிட்டிய சுமணரத்தின தேரர் எமது பண்ணையாளர்களின் மாடுகளை வலுக்கட்டாயமாகப் பறித்தமை தொடர்பிலும் நாங்கள் தெரியப்படுத்தியிருந்தோம்.

இந்த நாட்டிலே ஜனாதிபதிக்கும் அறிவில்லை, நிதியமைச்சருக்கும் அறிவில்லை, அவர்களின் பிரதிநிதிகளாக எமது மாவட்டத்தில் இருப்பவர்களுக்கும் அறிவில்லை என்ற நிலைமையே இருக்கின்றது. – எனத் தெரிவித்தார்.

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 14 வது பொதுப் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் இம்மாதம் 07ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை இடம்பெறும். தொடர்ச்சியாக 04 நாள்களுக்கு 08 அமர்வுகளாக பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் மொத்தமாக 2,621 பேர் இதன்போது பலதுறைகளிலும் பட்டங்களைப் பெறவுள்ளனர் என இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழக கலை, கலாச்சார பீடத்தின் கூட்டமண்டபத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், முதலாம் அமர்வில் பிரயோக விஞ்ஞானங்கள் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 475 பேரும், 2 ஆம் அமரவில் கலைப் பீடத்தினைச்சேர்ந்த 219 பேரும் 3 ஆம் அமர்வில் கலைப் பீடத்தினைச் சேர்ந்த 348 பேரும், 4 ஆம் அமர்வில் இஸ்லாமியக் கற்கைகள் அறபு மொழி பீடத்தினைச் சேர்ந்த 329 பேரும், 5 ஆம் அமரவில் இஸ்லாமியக் கற்கைகள் அறிபு மொழி பீடத்தினைச் சேர்ந்த 313 பேரும் 6 ஆம் அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பீடத்தினைச் சேர்ந்த 277 பேரும், 7 ஆம் அமர்வில் முகாமைத்துவ வர்த்தக பிடத்தினைச் சேர்ந்த 348 பேரும் 08 ஆம் அமர்வில் கலை கலாசார பீட மற்றும் முகாமைத்துவ வர்த்தக பீடங்களின் 312 வெளிவாரி மாணவர்கள் தமது பட்டங்களைப் பெறுகின்றனர் .

இந்த பட்டமளிப்பு விழாவில் 04 பேர் முதுதத்துவமானிப் பட்டங்களையும், 23 பேர் வியாபார நிருவாக முதுமானிப் பட்டங்களையும், 02 பேர் முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவினையும் பெறவுள்ளதுடன் பேராதனை பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் பேராசிரியர் எஸ் தில்லைநாதன் மற்றும் முன்னாள் பதிவாளர் ஜெளபர் சாதிக் ஆகியோருக்கு கெளரவ கலாநிதிப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இந்த பட்டமளிப்பு விழா நிகழ்வின் முதல் நாளன்று கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவும், இரண்டாவது நாளன்று உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் உம், மூன்றாவது நாளன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்கவும், இறுதி நாளன்று றுகுனு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் காமினி சேனாநாயக்க ஆகியோர் விசேட அழைப்பாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர் என்றார்.



மேலும் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் ஒவ்வொருவரும் அரசாங்கத்தின் கொவிட் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றவேண்டும். என்றும் ஒவ்வொருவரும் முகக்கவசங்களை அணிந்துவருவதுடன் தடுப்பூசியை பெற்றுக் கொண்ட அட்டையினையும் கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# இரு பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு

கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான குருகுலசிங்கம் நமச்சிவாயம் வயது (41) என்பவர் தனது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர் தனது உறவினரின் மரண வீட்டுக்கு சென்று நேற்று அதிகாலை வீடு திரும்பினார் எனவும் சம்பவ தினத்தன்று அதிகாலை அவரின் மனைவி வெளியில் வந்து பார்த்த வேளை வீட்டின் வெளி மண்டபத்தில் தூக்கிட்டிருந்ததாகவும் பின்னர் அயலவர்களின் உதவியுடன் தூக்கில் இருந்து மீட்டெடுத்தபோது அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான் ஏ.சி.றிஸ்வான் அவர்களின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டமையுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## டெல்ரா திரிவை விட ஒமிக்ரோனுக்கு குறைவான அறிகுறிகள் காணப்படும்!

### மக்களுக்கு எச்சரிக்கை

ஒமிக்ரோன் மாறுபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு டெல்டா மாறுபாட்டைவிட குறைவான அறிகுறிகள் இருக்கின்றன என சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதற்கமைய, மருத்துவ தரவுகளின்படி ஒமிக்ரோன் மாறு பாட்டின் அறிகுறிகளாக தலைவலி, குளிர், தொண்டை வலி, மூச்சுத் திணறல், காய்ச்சல் மற்றும் நிமோனியாவின் அறிகுறிகள் என்பனவற்றைக் குறிப்பிடுகின்றனர். எனவே, மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் காணப்படுமாயின் வைத்தியசாலையை நாடுமாறு சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# எல்லை தாண்டிய மீன்பிடி விவகாரம்: பேச்சுக்கு தமிழக முதல்வர் அழைப்பு

### சிவாஜிலிங்கம் கூறுகிறார்



எல்லை தாண்டிய மீன்பிடி விவகாரம் தொடர்பாக பேச்சுக்கு வருமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார் என எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

சுப்பர்மடம் பகுதியில் இடம்பெற்ற மீனவர்களின் போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கை காரணமாக லட்சக்கணக்கான கடற்றொழில் உபகரணங்களை மாத்திரமன்றி உயிரிழப்புக்களும் ஏற்படும் என எம்.கே. சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார்.

இலங்கை கடற்படையினரது படகுகளாலும், விபத்தினாலும் கொல்லப்பட்டு கரை ஒதுங்குகின்ற கடற்றொழிலாளர்களது சடலங்களால் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இருப்பினும் இலங்கை அரசாங்கம் இதை பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் குற்றம் சாட்டிய சிவாஜிலிங்கம், இரு தரப்பும் கடலில் மோதுவதை இல்லாமல் செய்ய இலங்கை இந்திய அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

## கொரோனா மற்றும் டெங்குக்கு நடுவில் நாட்டில் பரவும் புதிய வைரஸ் காய்ச்சல்

கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு காய்ச்சலுக்கு கூடுதலாக, தற்போது நாட்டில் கண்டறியப்படாத வைரஸ் காய்ச்சல் பரவி வருகின்றது எனப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் இன்று (புதன்கிழமை) தெரிவித்துள்ளது.

எனவே, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தொடர்ந்தால் உடனடியாக வைத்திய உதவியை நாடுமாறு அந்த சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

டெங்கு காய்ச்சல் பரவுவது நாட்டில் ஒரு தொற்றுநோய்க்கான அறிகுறிகளைக் காட்டுகிறதென்றும் மேல் மாகாணம் உட்பட நகர்ப்புறங்களில் பெரும்பாலான சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் அவர் கூறினார்.

கட்டுமானப் பணியிடங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகளவில் கண்டறியப்படுகின்றனர் என சுட்டிக்காட்டிய அவர், மக்களை அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

## அத்தியாவசியமற்ற பயணங்களை தவிர்க்க மக்களுக்கு அறிவுறுத்தல்

கொரோனா நோய்த்தொற்றுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதால், நீண்ட வார இறுதியில் அத்தியாவசியமற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

ஒமிக்ரோன் மாறுபாடு சமூகப் பரவல் வீதத்தில் உள்ளதா இல்லையா என்ற கேள்விக்கு, 'சமூகப்பரவல்' என்ற வார்த்தையின் வரையறையின் படி அதை சரியாக உறுதிப்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

மாறுபாடு அந்த நிலையை அடைந்திருந்தால், பொதுமக்கள் தங்கள் நடத்தையில் கவனமாக இருக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேநேரம், தற்போது யாரும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுபவர்களாகத் தெரியவில்லை என்றும், முகக்கவசம் அணிவதைத் தவிர, மற்ற சுகாதார வழிகாட்டுதல்கள் தற்போது பின்பற்றப்படவில்லை என்றும், அரச மருத்துவ அதிகாரிகள் சங் கத்தின் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார். இது நிச்சயமாக பாதிப்பைத் தரும், என்றும் வரவிருக்கும் மாதங்களில் கொரோனா வழக்குகளில் அதிகரிப்பை ஏற்படுத்துமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுகாதார வழிகாட்டுதல்களை அனைவரும் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவதுடன், தற்போதைய நிலைமை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு தடுப்பூசிகளை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பயங்கரவாத தடை சட்ட திருத்தம் முழுமையாக இடம்பெறல் வேண்டும்!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக திருத்தப்பட வேண்டும் என சர்வதேச மனித உரிமைகள்கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கம் பயங்கரவாதத் தடை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு கடந்த 27 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது.

ஆனால் இது போதுமானதல்ல என்றும் இது சர்வதேசத்தின் அழுத்தங்களைத் தணிப்பதற்கான அரசின் முயற்சி மட்டுமே என்றும் அந்த கண்காணிப்பகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகை அற்றுப் போகும் சூழ்நிலை ஏற்படும் என்றும் இதற்கு மத்தியில் அரசாங்கம் தற்போது சர்வதேச அழுத்தத்தின் தாக்கத்தை உணர ஆரம்பித்துள்ளதென்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு சர்வதேச சமூகம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் முழுமையான திருத்தத்துக்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

# கனிய மண் அகழ்வு மற்றும் மணல் ஆய்வு நடவடிக்கைகளை இடைநிறுத்த தீர்மானம்!

### மன்னார் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்தில் முடிவு






மன்னார் மாவட்டத்தில் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக மாவட்ட ரீதியாக அனுமதி பெற்றுக் கொள்ளப்படாது ஆய்வு என்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த கனிய மண் அகழ்வு மற்றும் காற்றாலை மின் சக்தி திட்டத்தின் விரிவுபடுத்தலை உடனடியாக நிறுத்தும் விதமாக மன்னார் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மன்னார் நகர் பிரதேச செயலாளர் ம.பிரதீப்பின் நெறிப்படுத்தலில் நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் மன்னார் நகர மண்டபத்தில் நேற்று(செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

மேற்படி கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளில் ஐந்து வருடங்களுக்கு மேலாகக் கனிய மண் ஆய்வு என்ற போர்வையில் பேசாலை, நடுக்குடா, கட்டுக்காரன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் நிலத்தின் கீழ் 25 அடி ஆழத்துக்கு துளையிட்டு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்ற நிலையில் இந்த ஆய்வு மற்றும் அகழ்வை உடனடியாக நிறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேநேரம் மன்னாரில் கடந்த வருடம் அமைக்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி செயற்திட்டம் காரணமாக மீன்பிடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என மக்கள் குற்றம் சுமத்திய நிலையில், மன்னார் மாவட்டத்தில் மேலதிகமாக நிறுவப்பட கலந்தாலோசிக்கப்படும் காற்றாலை செயற்திட்டத்தையும் நிறுத்துவதற்கு அபிவிருத்திக் குழுவால் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் பிரதேச ரீதியாக மக்கள் எதிர் கொள்ளும் பல்வேறு விடயங்கள் பற்றியும் விரிவாகக் கவனம் செலுத்தப்பட்டதுடன், கடந்த வருடம் இடம்பெற்ற பிர தேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளமை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், வினோநோகராதலிங்கம், நகர, பிரதேசசபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச பதவி நிலை உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.02.2022இல் வெளியிடப்பெற்றது.